
# ஆத்ம ஜோதி



நயினை - நாகபூஷணியம்மன் - திருக்கோபுரம்.





# ஆத்ம ஜோதி

(ஓர் ஆத்மீக மாத வெளியீடு)

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.—சுத்தானந்தர்,

| | | |
|---|---|---|
| சோதி 12 | விகாரி௵ கார்த்திகைமீ 1-ந்வ (17-11-59) | சுடர் 1 |

## பொருளடக்கம்.

| | | |
|---|---|---|
| 1 | சுவாமி சுத்தானந்த பாரதியார்......பாடியவை | 1 |
| 2 | ஸ்ரீ நாகபூஷணி அந்தாதி மாலை | 2 |
| 3 | நயினாதீவு நாகபூஷணி அம்மாள் திருத்தல வரலாறு | 3 |
| 4 | திருமுறைக்காட்சி (26) | 8 |
| 5 | இறைவன் தந்த பரிசு | 12 |
| 6 | கண்ணன் காட்டும் கர்மயோகம் | 13 |
| 7 | சிரத்தையுடைய......கிடைத்தது | 14 |
| 8 | கடைக்கண் பாராய் | 20 |
| 9 | வித்தை-அவித்தை | 21 |
| 10 | முக்குணப் போராட்டம் | 23 |
| 11 | என் இருபத்துநான்கு ஆசிரியர்கள் | 26 |
| 12 | தாகம் தீர்த்ததாள் | 28 |
| 13 | பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் பல்லாண்டு வாழ்த்து | 32 |

## ஆத்ம ஜோதி சந்தா விபரம்.

ஆயுள் சந்தா ரூ. 75-00,        வருடச் சந்தா ரூ. 3-00.
தனிப்பிரதி சதம் 30.

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்.
பதிப்பாசிரியர்; நா. முத்தையா,

"ஆத்ம ஜோதி நிலையம்" நாவலப்பிட்டி. (சிலோன்.)



ஓம்

## சுவாமி சுத்தானந்த பாரதியார்

அவர்கள்

### நயினாதீவு அம்பாளைத் தரிசிக்க வந்தபோது அம்பாள் சந்நிதியிலிருந்து பாடியவை.

மங்கல மணம்பரவு மலர்தலைக் காலைபோல்
மனமாய விருள் போக்குவாய்
மாசிலாத் தென்றல்போல் வந்தெனது சோர்வினை
மாற்றி மண வீறுதருவாய்
பொங்குதிரை ஆழிபோல் என்னுள்ளம் பூரிக்கப்
பொது வேத முரசொலிப்பாய்
புண்பட்ட நெஞ்சிலே வெண்பட்டு நிலவெனப்
போந்து சாந்தம் அளிப்பாய்
செங்கதிர் ஞாயிறென வேயெனது சித்தமிசை
திவ்விய ஞானம் பொழிகுவாய்
சிங்கமென வீரமும் திருமூலர் யோகமும்
திருக்குறளின் வாழ்வும் அருளாய்
துங்கமிகு நயினையில் தங்கியே புவனந்
தனைக்காத்து அருள் அன்னையே
சதாசிவ மனோன்மணி சிதாகாச ஓம்சுத்த
சத்தியே போற்றி போற்றி. 1.

உலக நாயகி உத்தம நாயகி
இலகு சத்தி இறைவி மனோன்மணி
நலிவு தீர்த்து நலந்தரும் அம்மையே
பொலிவுறச்செய் புதியுக வாழ்க்கை
யே 2.

ஏக சக்தி இன்ப வரந்தரும்
யோக சக்தி உயிர்க்குயி ராகிய
போக சக்தி புனித பராசக்தி
நாக பூஷணி நாரணி அம்மையே 3

தேகச் சட்டை அணிந்திடும் சீவனின்
சோக நாடகம் தீர்த்து சுகோதய
யோக சித்தி யுடன்பெறச் செய்தருள்
நாக பூஷணி நல்ல பராசக்தி. 4

வீழ்க தீய வினைக்குலம் யாவையும்
சூழ்க தூய சமரசச் சோதியே [ய்
வாழ்க மன்னுயிர் வானருள் பாலிப்பா
ஊழ் கடந்தொளிர் ஓம்சுத்த சக்தி
யே. 5

# ஸ்ரீ நாகபூஷணி அந்தாதி மாலை.

(நயினாதீவுச் சுவாமிகள்)

கற்பகக் கன்றைக் கடம்பனைத்தந்த கனகவரை
யற்புதமோன வருணாகந் தாங்கு மமிர்தவல்லீ
தற்பரன் வாமந் தழைத்தே சகல வுயிர்களுக்கும்
நற்பதியே யெனைப் பெற்ற சதானந்த நாகம்மையே. 1

பெறறதாய் பார்க்கப் பிள்ளைநான் வருந்திப் பிறப்பெனுஞ் சாகரத்தாழ
நற்றவமில்லா வென்னைநீ விட்,டால் நியாயமோ நல்லுரையாகச்
சொற்றவக் கரையி லேறியானுய்யத் துணையுநீ யன்றியா ருளர்சொல்
கற்றவர்க் கினியாய் நயினையம் பதிவாழ் கண்மணி நாகபூ ஷணியே 2

கற்றவர்க் கினியாய் நயினையம் பதிவாழ் காரணீ நாரணன் றங்காய்
மற்றவ ரறியா மரகத வரையின் வாமமே வளர்பசுங் கொடியே
நற்றவ ரோடு சேயெனை யிருத்தி நாதநா தாந்தமுங் காட்டி
முற்றுமாய் நிறைந்த பூரணானந்த முத்திதா நாகபூ ஷணியே 3

முத்தியாங் கரையைப் பற்றியே யுய்யும் முன்னதாய் முரணலை மோதி
வற்றிடா மாய வாரிதி மத்தி மயங்கியா னாழ்ந்திடா வாறு
சத்தியாய்ச் சிவமாய்த் தனிப்பரந் தானே தானுமாய் நின்றதற் பரையே
சித்தெலாம் வல்லாய் சேயெனைக் காத்தாழ் திருமணி நாகபூ ஷணியே. 4

காத்தெனை யாளுங் கனகமா வரையே கமலையுங் காயையும் மருங்கே
நீத்தவ ரமரர் கருடர் கந்தருவர் நின்பணி புரிபவ ரன்னே
வேர்த்தவ ராய்நின் றுயிர்த்திர ளாட்டு வினையெலாம் பற்றி நீறாகப்
பார்த்தருள் விழியைப் பரப்புதி யீன்ற பாற்பதி நாகபூ ஷணியே 5

சேர்த்தரு ளன்னே தீவினை கழியச் செனனமு மரணமு மொழியக்
காத்தரு ளென்னை நின்னடி பணிந்தேன் கருணையே பொழிவிழி பரப்பிப்
பார்த்தரு ளீன்ற பகவதி யாகிப் பங்கயத் தாள்முடி சூட்டி
நீத்தருள் பாவ நிலையற மௌன நிலையருள் நாகபூ ஷணியே. 6



# நயினாதீவு நாகபூஷணி அம்மாள் திருத்தல வரலாறு.

(ஆசிரியர்)

**கல்லோலோல்ல ஸிதாமிர்தாத்பதிலஹரீ மத்யேவிராஜன்மணி**
**துவீபேகல்பகவாடிகா பரிவிருதே காதம்பவாட்யுஜ்ஜ்ய வலே**
**ரத்னஸ்தம்ப ஸஹஸ்ரநிர்மித ஸபாமத்யே விபானோத்தமே**
**சிந்தாரத்னவிநிர்மிதம் ஜனனிதே ஸிம்ஹாஸனம் பாவயே**

இது ஆதிசங்கராச்சாரியாரினால் 'மந்த்ர மாத்ருகா புஷ்பமாலாஸ்தவ' என்ற நூலில் அருளப்பட்ட சுலோகமாகும்.

**இதன் பொருள்:-** தாயே! அலைகளினால் சோபிக்கின்ற அமிர்த சமுத்திரத்தின் நடுவில் விளங்குகின்ற மணித்தீவிலே கற்பகமரங்களாலான வேலியினால் சூழப்பட்டதும், கடம்பமர வரிசைகளால் பிரகாசிப்பதும், இரத்தினங்களால் இழைக்கப்பட்டு ஆயிரங்கால்கள் அமைத்து நிருமித்த சபையின் நடுவில் உள்ளதுமான சிறந்த விமானத்திலே (கோயிலிலே சிந்தாமணிகளை அமைத்துச் செய்யப் பட்டதான சிங்காசனத்தை நான் உனக்குத் தியானம் செய்து கொடுக்கிறேன்) மனதினால் சமர்ப்பிக்கிறேன்.

சக்தி பீடங்களாகிய நவபீடங்களில் நயினையும் ஒன்றாகும். மணித்தீவு எனச் சங்கராச்சாரியார் குறிப்பிட்டதுவும் இதனையேதான். ஈழத்துத் திருத்தலங்களுள் சரித்திரங் கண்டதலங்கள் பலவுள. அத்தலங்களை இன்றும் சாதிசமய வேறுபாடற்ற முறையில் மக்கள் சென்று வணங்குவதைக் காண்கின்றோம். அரசியலார் கனவிலுங் காணமுடியாத சமரச மனோபாவத்தை அத் தலங்களில் மக்கள் அநுபவிக்கின்றனர். உதாரணம்:- கதிர்காமம், சிவனொளிபாதம், திருக்கேதீச்சரம், கோணச்சரம், முன்னேஸ்வரம், செல்லச்சந்நிதி, நயினாதீவிலுள்ள நாகச்சரம், என்பன. இவற்றுக்கெல்லாம் ஆதிசக்தி பீடமாயமைந்தது நாகேஸ்வரி ஆலயமாகும். இதனுடைய தோற்றம் சரித்திரகாலத்திற்கு முற்பட்டதெனக் கூறுவதற்கும் தகுந்த ஆதாரங்களுண்டு.

ஈழநாட்டுத் திருத்தலங்களின் வரலாறுகளைச் சரித்திரக் கண் கொண்டு மாத்திரம் ஆராயாது ஆத்மீகத் துறையில் மக்களுக்கு அறியச் செய்யும் முகமாக ஆத்மஜோதி இப் பணியை ஆரம்பித்துள்ளது. திருவருள் முன்னின்று வழிகாட்ட சக்தியின் துணைகொண்டு ஆரம்பமாகியுள்ளது. ஆதிசக்தியாகிய அம்பிகை வரலாறு முதலில் வருவது பொருத்தமாக அமைந்துள்ளது. மற்றைய திருத்தலங்களின் வரலாறுகள் கிடைக்கும் முறைப்படி வெளிவரும்.

இலங்கையின் வடபாகத்தில் ஏழு தீவுகள் இருக்கின்றன அவற்றுள் நடுநாயகமாக விளங்குவது நயினாதீவாகும். அது இயற்கை அழகினை உடையது. புராதன பல அதிசயங்களை உடையது. யாழ்ப்பாணப் பட்டினத்திற்குத் தென்மேற்கே சுமார் இருபது மைல் தூரத்தில் உள்ளது. இதற்கு மணித்தீவு மணிபல்லவத்தீவு, மணிநாகதீவு, நாகதீவு, நாகநயினார்தீவு, நயினார்தீவு, சம்புத்தீவு ஆகிய பல பெயர்கள் உண்டு. தட்சிண கைலாயமெனப் பெயர் பெற்றுச் சிறப்புற விளங்கிய லெமூரியாக் (நாகநாடு) கண்டத்தில் கடல்வாய்ப்பட்டது போக எஞ்சியுள்ள பாகத்தில் ஓர் சிறந்த பகுதி என்பது ஆராச்சியாளருடைய துணிபாகும். நயினாதீவுச் சுவாமிகள்போன்ற பல மகான்களும் பல புலவர்களும் வாழ்ந்து வந்ததே இதற்கு அத்தாட்சியாகும்.

பூர்வத்தில் இலங்கையில் இயக்கர், நாகர் ஆதிய இருசாதியினர் வசித்து வந்ததாகச் சரித்திரம் கூறுகின்றது. நாகர் வடக்கேயும் இயக்கர் தெற்கேயும் வசித்து வந்தனர். நாகர் சர்ப்ப வழிபாடுடையராய் இருந்தனர். இவர்கள் கல்வியிலும் சீர்திருத்தத்திலும் சிறந்தவர்கள். நாக இராசனாகிய மகோதரனுக்கும் அவன் மருமகனாகிய குலோதரனுக்குமிடையில் ஓர் மணியிழைத்த ஆசனத்தை முன்னிட்டு பெரும் போர் நடந்தது. அப்பொழுது இந்தியாவிலிருந்து கௌதம புத்தர் இங்கு வந்து இவர்கட்கிடையே சமாதானத்தை நிலைநாட்டி பஞ்சசீலத்தை இவர்கட்கு உபதேசம் செய்தார். உபதேசத்தைக் கேட்டதும் இருவருக்கும் மனந்திருந்தி மணியாசனத்தைப் புத்தருக்குக் கொடுக்க அவர் அதை இங்கு ஸ்தாபித்துச் சென்றாரென்று மகாவம்சம் கூறுகின்றது.



மணித்தீவில் புவனேஸ்வரி பீடம் எனக் காளிதாசனால் கூறப்பட்டது இத்தலமே என்று கூறுவர். சீத்தலைச் சாத்தனார் தமது மணிமேகலை என்னும் நூலில் இதை 'மணிவல்லபம்' என்றும், பட்டினத்தடிகள் இதை 'மணித்தீவு' என்றும் கூறியதாகத் தெரிகின்றது. இத்தீவிலே சர்ப்பங்கள் மற்றைய அயல் தீவுகளிலும் பார்க்க அதிகமாக வாசஞ் செய்கின்றன. இவைகட்கு ஜென்ம விரோதிகளான கீரிப்பிள்ளை, செண்பகம் முதலியன இங்கு இயற்கையாயில்லை. அவற்றை இங்கு கொண்டுவந்து வளர்ப்பினும் அவைகள் இறந்துவிடுகின்றன.

நாகபூஷணி அம்பாளின் திருக்கோவிலின் வடபாலுள்ள பாம்பன் கடலில் இற்றைக்கு ஏறக்குறைய இரண்டாயிரம் வருடங்களின்முன், ஓர் நாகம் தனது வாயிற் பூவைக் கவ்விக்கொண்டு வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நீந்திவருகையில் ஓர் கருடன் குறித்த பாம்பைக் கண்டு தொடர்ந்தது. இதனால் குறித்த சர்ப்பம் கடலில் வளர்ந்துள்ள ஓர் கல்லில் சுற்றி மறைந்துகொண்டது. கருடனும் எதிரே உள்ளதோர் கல்லில் இருந்துகொண்டது. நாகமும் கருடனும் தர்க்கம் செய்துகொண்டிருக்கையில் அவ்வழியாக மரக்கலத்தில் வந்த வணிகன் இவைகளைக் கண்டதாகவும் நாகபாஷையறிந்தபடியாலவன் நாகத்திடமிருந்து வரலாற்றை அறிந்து கருடனை இந்த நாகத்தைக் கொல்லாது விடும்படி கேட்டதாகவும் கருடன் இத்தீவிலிருக்கும் தேவி ஆலயத்திற்கு அவனது பொருள் முழுவதையும் செலவு செய்து விடும்படி சொன்னதாகவும் அவனுமப்படியே செய்து நாகத்தைத் தப்பவைத்ததாகவும் சொல்லுகின்றனர். அக்கற்கள் இரண்டும் இன்றும் பாம்புசுற்றிய கல்லு, கருடன் கல்லு என்ற பெயர்களால் அழைக்கப்பெறுகின்றன.

நயினாபட்டர் என்ற பிராமணரால் இங்குள்ள அம்மை பூஜிக்கப்பெற்றமையால் நயினாதீவு என்று இது அழைக்கப்படுகிறது. இப்பொழுது அனலைதீவு-புளியந்தீவில் இருக்கும் நாகதம்பிரான் விக்கிரகம் டச்சுக்காரர் கோவிலைத்தாக்குமுன் நயினாதீவில் இருந்ததென்பது முதியோர்களால் ஒப்பமுடிந்ததொன்றாகும். நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் பூர்வ மூல மூர்த்தியாய் அமைந்திருப்பது ஐந்துதலை நாகமாகும். இம் மூர்த்தியைத் தரிசித்த தென்னிந்திய சிற்பசாஸ்திர ஆராய்ச்சி

யாளர் எம். நரசிம்மன் அவர்கள் சரித்திரத்திலே பேசப்பட்ட பழைய சர்ப்பவழிபாட்டுக்கு ஆதாரமாக இலங்கை இந்தியாவிலே இன்றும் பிரத்தியட்சமாகக் காட்சியளிப்பது இம்மூர்த்தியே என்றும் சர்ப்பவழிபாட்டில் நம்பிக்கை குறைந்த பிற்காலத்திலே நாகபூஷணி அம்மையை அயலே பிரதிட்டைசெய்திருக்கிறார்களென்றும் முடிபுக்கு வந்திருக்கிறார்கள். மகாகுண்டலினி சக்தியே சர்ப்ப உருவமாகும்.

நாகபூஷணி அம்மன் ஆலயம் சமுத்திரத்தை நோக்கியபடி தம்மையடையும் மெய்யடியார்களைத் தாமதமின்றி வரவேற்பதுபோன்று அழகுற விளங்குகிறது. இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் இங்கு வாணிபநிமித்தம் வந்த காவிரிப்பூம் பட்டினத்து வணிககுலப் பெருமக்கள் இதைச் சீர்படுத்தி நிறுவுவதில் பங்குபற்றினர். செப்புத்தேர், பவளத்தேர்களை ஏற்படுத்தி வைத்தார்கள் என்றும், நயினாபட்டரை பூஜகராக ஏற்படுத்தினார் என்றும் கர்ணபரம்பரையாக நம்பப்பட்டு வருகின்றது. இதன் மூலமூர்த்தியான சர்ப்பவழிபாட்டுக் காலம் பதினாயிரம் ஆண்டென்று இந்திய சிற்பசாஸ்திர அறிஞர் நரசிம்மன் கூறியுள்ளார். புராதனமான இந்த ஆலயம் இடையிடையே பலராலும் சீர்திருத்தப்பட்டுநிர்மாணிக்கப்பட்டு வந்தது. டச்சுக்காரர் காலத்தில் அவர்கள் இப்புராதன ஆலயத்தையும் இங்கிருந்த சிவன் கோவிலையும் புத்தர் கோவிலையும் இடித்து அழித்தார்கள். சிவன் கோவிலும் புத்தர் கோவிலும் அத்துடன் ஒழிந்தன. ஆனால் இந்த அம்மையின் திருவுருவத்தை அந்தநேரத்தில் ஆலம்பொந்துள் ஒளித்துவைத்திருந்த அடியார்கள் திரும்பவும் கோயிலைக்கட்டி ஸ்தாபித்தனர்.

அக்கோவிலிலே அப்பொழுதிருந்த செப்புத்தேர் பவளத்தேர்கள் அந்நியர் கைப்படாமல் வடமேற்குக் கடலில் தள்ளிவிடப்பட்டன. அக்கோவில் மேலும் திருத்தப்பட்டு தற்போதைய நிலையில் விளங்குகிறது இத்தலம் அர்ச்சுனன், பட்டினத்தடிகள், மணிமேகலை, ஆபுத்திரன், புத்தர் முதலிய பெரியோர்களால் தரிசிக்கப்பட்டது.

பழைய காலத்தில் எல்லாம்வல்ல இறைவன் ஆன்மாக்களை உய்வித்தற்பொருட்டு தமது மாபெருங் கருணையைப் பதித்த இடங்கள் அறுபத்துநான்காகும். அருட்சக்தி பீடங்கள் எனப்



படும் இவை காசிவிசாலாட்சி, காஞ்சிகாமாட்சி, மதுரைமீனாட்சி என்று வருவனவாகும். அவற்றுள் இரண்டு மணித்தீவில் அமைந்துள்ளன என்றும் அவை "புவனேஸ்வரிபீடம்" "திரிபுரபைரவிபீடம்" எனப் பெயர் பெற்றவை என்றும் தேவி பராக்கிரமத்தில் விபரிக்கப்பட்டுள்ளது.

அனலை தீவைச்சேர்ந்த புளியந்தீவு என்னுமிடத்திலுள்ள இப்பெருமானைப் 'புலிஏந்தி நாகதம்பிரான்' எனவும் அழைப்பர். நாகபூஷணி அம்மை தம்மை வழிபடும் மெய்யடியார்களுக்கு சகல பாக்கியங்களையும் அளித்துவருகிறார்- ஆனால் பிரதானமாக புத்திரபாக்கியமின்றி தீராத மனக்கவலையுற்றோரின் பிணியைத் தீர்க்கும் அருமருந்தாக அம்மை அருள் பாலிக்கின்றாள். அதனால் இலங்கையின் பலபாகங்களிலிருந்தும் வருடத்தில் பல நாட்களிலும் அன்பர்கள் இங்கு வந்து சாந்திபெற்றுச் செல்கிறார்கள்.

---

குண்டலியைத் தன்னருளா லியக்குந் தன்மை
குவலயத்தோ ருணர்ந்துமிகத் தொழுது வாழக்
கொண்டபெரு நாகமதை யணிய தாகக்
குலவுதிரு வுருவதனிற் சூடி நின்ற
அண்டர்தொழுந் நாகபூ ஷணியா மம்மை
அழகுபெறுந் தேர்மீதே யமர்ந்து மிக்க
மண்டுபெரு மன்புடனே யடியார் போற்ற
வழங்குதிரு வருளுடனே வாழி வாழி.

—பிரம்மஸ்ரீ சி. கணேசையர்

வாலறிவோ ருணரமுத பக்தியிற்கற் பகஞ்சூழ்ந்த மணித்தீ பத்தி
னேலுறுநற் கடம்பமர்கொல் லையிற்சிந்தா மணிப்பீடத் திருந்த தோற்ற
மாலுறுமெய் யடியவர்கண் டின்புறுவா னயினைதனின் மணிப் டத்தி
னேவிடுகற் பனைகடந்தே யமர்நாக பூடணியென் னுளத்த ளாமால்.

நீருற வளைந்து புரண்டெழுந் திரைந்து நிறைந்திடும் பணத்திரை விரித்துக்
காருற விடங்கொண் டுலகெலா மீன்ற கருணைநா யகிதிருக் கோலத்
தேருற விளங்கு முரசுமாத் திருந்த விருங்கட லடுவணெண் டிசையும்
பாருடன் புகழத் திகழ்சிதா மணிபோற் படிந்ததந் நயினையம் பதியே.

—நயினை மான்மியம்

# திருமுறைக்காட்சி. (26)

(முத்து,)

## யான் இதற்கிலன் ஓர்கைமாறு.

நாணயம் வழங்காத காலத்திலே பண்டமாற்று நடை பெற்று வந்தது. அதாவது பொருளைக் கொடுத்துப் பொருளை மாற்றிக்கொள்ளுதல். தம்மிடத்து மேலதிகமாக இருக்கும் பொருளைக் கொடுத்து தேவையான பொருளை மாற்றிக்கொள்ளுதல். இந்த முறையினால் எல்லாரும் உழைப்பாளிகளாகக் காணப்பட்டார்கள். பற்றாக்குறை இல்லை; சோம்பலுக்கு இடமில்லை; ஒருவரை இன்னொருவர் ஏமாற்றுவதற்கும் இடமில்லை; அகவிலை ஏற்றமில்லை.

நாணயம் பழக்கத்திற்கு வந்ததும் பொருள் விற்பனவு கொள்வனவில் பல ஏமாற்றங்கள் புகுந்துகொண்டன. பொருள் உற்பத்தியாளனுக்கும் உபயோகிப்பவனுக்குமிடையிலே தரகர் புகுந்து கொண்டனர். உழைப்புக்கு ஏற்றகூலி கிடைப்பதில்லை. தரகர்மார் கொள்ளைலாபம் அடித்தனர். பொருளின் உற்பத்தியாளனுக்கு ஐந்து ரூபா கிடைக்கும் பொருளுக்கு வாங்குபவன் பத்து ரூபா கொடுத்து வாங்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. உற்பத்தியாளனுக்குப் பொருள் நிறையக் கிடைத்தால்தான் உற்சாகமாய் வேலைசெய்வான். நெல்விளைவிப்பவன் அரைவயிறு பட்டினி. வாங்குபவன் கால்வயிறு பட்டினி. இடையிலுள்ளவனுக்குப் பணவீக்கம் ஏற்பட்டு சமியாக் குணம். இது இக்காலப் பொருளாதாரத்தில் விளைந்த வியாபாரம்.

மனிதன் ஒவ்வொருவனும் கஷ்டமின்றி இலகுவான வழியில் பணம் திரட்டுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளான். உழைப்பின்றி ஊதியம் பெறச் சுருக்கமான வழிதேடுகின்றனர். உழைப்பவனுக்கு நிலமில்லை; உழைப்பில்லை; ஊதியமில்லை. மனிதனுடைய உழைப்பை இயந்திரங்கள் சுரண்டுகின்றன. இதனால் இன்றைய நாணய உலகில் பெரும், போராட்டம் ஒன்று நிகழ்கின்றது.



இதேபோலப் பக்தர்களும் ஆண்டவனுடன் பண்டமாற்றுச் செய்தார்கள். மணிவாசகப் பெருமான் ஆண்டவனைத் தாம் வாங்கிக்கொண்டார். அதற்குப் பதில் தம்மை அவருக்குக் கொடுத்தார். விலையொத்த பொருட்களைக்கொடுத்து மாறுவதில் யாருக்கும் ஆட்சேபனை இருக்கமுடியாது. சில பண்டமாற்றில் இருவரும் லாபம் அடைந்ததாகவே மகிழ்வார்கள். வேறுசில பண்டமாற்றில் இருவரும் நஷ்டம் அடைந்ததாகவே துன்பப்படுவார்கள். மற்றவன் தன்னை ஏமாற்றிவிட்டதாகவே குறைகூறுவார்கள் இருவரும். மணிவாசகர் தாம் செய்த பண்டமாற்றில் தனக்கே கொள்ளைலாபம் என்று கூத்தாடுகின்றார். சிவபெருமான் ஏமாந்துவிட்டதாக அவரது அபிப்பிராயம். எங்கள் பண்டமாற்றில் நீர் என்ன லாபம் அடைந்தீர்? இதில் யார் கெட்டிக்காரர் என்று குழந்தைபோல் பேசுகின்றார் மணிவாசகர்.

பொருளை ஒரே நேரத்தில் கொடுத்து மாறுவதுமுண்டு. முன்பின்னாகக் கொடுத்து மாறுவதுமுண்டு. மணிவாசகர் தன்னை முதலில் கொடுக்கவில்லை. தன் பொருளின் பெறுமதி அவருக்குத் தெரிந்திருந்தது, ஆதலால் இறைவனுரையே முதலில் பெற்றுக்கொண்டார். பொருளைக் கொடுத்து மாறுவதாக இருவரும் முதலிலேயே பேசிக்கொண்டனர். இரு பொருள்களின் பெறுமதியும் தெரிந்ததே. என்றாலும் மணிவாசகனுருக்குத்தான் பெறப்போகும் பொருளின் லாபம் மிகக் கொள்ளையானது என்பது தெரியும். தான் கொடுப்பதோ ஒன்றுக்கும் உதவாதென்பது தெரியும். ஆதலால் தான் முதலில் பெற வேண்டிய பொருளைப் பெற்றுக்கொண்டார்.

இப்படி மற்றவரை ஏமாற்றிப் பண்டமாற்றுச் செய்யலாமா என்று நீங்கள் கேட்கக்கூடும். சிவபிரானுகவே விரும்பித் தன்னை முதலில் கொடுத்தார். வலிந்து என்னை எடுத்துக்கொண்டார்.

"தந்தது உன்தன்னைக் கொண்டது என்தன்னை" என்கின்றார். எமது வீட்டிற்கு ஒருவர் வலிந்துவந்து நல்லபொருளைக் கொடுத்து எமக்குப் பயன்படாத பொருளை எடுத்துக்கொண்டு சென்றால் வேண்டாமென்று சொல்லுவோம். இப்படி ஏன் செய்தார் என்ற வினா அடுத்தபடி எழுகின்றது. முதலில்

பேசாமலே இருந்தார்! எதற்கும் இறைவனாரேயே கேட்டுப் பார்ப்போம் என உள்ளம் உசாவியது. எங்கள் பண்டமாற்றில்

சங்கரா ஆர்கொலோ சதுரர்!

இப்படி நஷ்டம் அடையத்தக்கதாக யாராவது பண்டமாற்றுச் செய்வார்களா? இப்படி நஷ்டலாபம் தெரியாது பண்டமாற்று செய்வதால்தான் தினமும் பிச்சை ஓட்டைக் கையிலெடுத்துக் கொண்டு கிளம்பிவிடுகின்றீர். உமது பெயருக்கேற்ப நீர் நடப்பது சரியே. சங்கரன் என்றால் சுகத்தைச் செய்பவன் என்பது பொருள்.

இப்பண்டமாற்றில் அளவில்லாத இன்பத்தையான் அடைந்தேன். என்னிடமிருந்து எதனைப் பெற்றீர்.

"அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றது ஒன்று என்பால்"

பொருளைக் கொடுத்தவன் அத்துடன் போய்விடுவான். நீரோ கொடுத்த பொருளைக் காப்பாற்றிக் கொடுக்கின்றவராக இருக்கின்றீரே! எனது சிந்தையிலேயே வந்து குடிகொண்டுவிட்டீர். இன்றுவரை ஐம்புலவேடர் குடிபுகுந்து என்ன கூத்தெல்லாம் செய்தார்கள். எனது சிந்தையிலே நீர் குடிபுகுந்தும் அவர்கள் இருக்கிற இடமே தெரியவில்லை. திருப்பெருந்துறையில் வந்து என்னை ஆட்கொண்ட தேவரீர் நீரே, எமது சிந்தையிலும் இருக்கின்றீர்.

ஒரு மகனின் நலன்கள் யாவற்றையும் ஒரு தந்தை கவனிப்பதுபோல் நீரே தந்தையாகி வந்து கவனித்தீர்! குழந்தைக்கு எது தேவையோ அதைத்தான் தந்தைசெய்வார். தந்தையின் குணம் அத்தனையும் இருந்தபடியால் அல்லவோ வலிதாகவந்து உம்மைத் தந்தீர்.

சங்கரா! ஈசா! ஒன்றையும் எதிர்பாராது அருள்காரணமாகவே உயிர்கட்கு நன்மைசெய்தல் ஆலத்தை அமுதாகக் கொண்ட பெருமானாகிய உமது செயலாகும்.



எந்தையே ஈசா உடலிடம் கொண்டாய். உன்கருணைத் திறத்தினாலல்லவா என்னுடலையும் இடமாகக்கொண்டாய். உன்னைத் தந்து என்னை எடுத்துக்கொண்டமை நினது இயற்கைக் கருணையாகும். என் சிந்தைக்கண் நீ புகுந்து நின் சிந்தையாக அதனை மாற்றியதனால் என்சிந்தை யென்றொன்று இல்லையே ஆகிவிட்டது. என்னுடலை நின்னுடலாக மாற்றியதனால் என்னுடலமென்பதும் என்று ஒன்று இல்லாது போய்விட்டது, நீ என்னுள்ளம் உடலும் உயிர் ஆதியவற்றை மாற்றிக்கொண்டவாறே யானும் மாற்றுதற்கு என்னிடம் அப்படி ஒன்றுமே இல்லை. அதனால் செய்தற்குரிய கைமாறும் இலனாயினேன். இதனை மணிவாசகர் வாக்கினாலேயே பாருங்கள்.

தந்ததுஉன் தன்னைக் கொண்டதுஎன் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தம்ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன்று என்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறைஉறை சிவனே
எந்தையே ஈசா உடலிடம் கொண்டாய்
யான்இதற்கு இலன்ஓர்கைம் மாறே.

**பொருள்:-** சங்கரனே! எனக்கு மிகப் பெரியோனான உன்னைத் தந்திருக்கின்றாய்; அதற்குப் பண்டமாற்றாக மிகச் சிறியோனான என்னை ஏற்றுக்கொண்டிருக்கிறாய். இந்த விஷயத்தில் நம் இருவரில் யார் சாமார்த்திய சாலி? முடிவு என்பதே இல்லாத இன்பத்தை உன்னிடமிருந்து நான் அடைந்திருக்கிறேன். இதற்கு ஈடாக நீ என்னிடமிருந்து பெற்றுக்கொண்ட பொருள் யாது? எனது நெஞ்சையே கோயிலாகக் கொண்ட எம்பெருமானே! திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே! எனது தந்தையே! ஈசனே நீ என் உடம்பையே இடமாகக் கொண்டிருக்கிறாய். இந்த உபகாரத்திற்கு நான் செய்யக்கூடிய கைமாறு ஒன்றுமில்லை.

# இறைவன் தந்த பரிசு.

(சுவாமி அபேதானந்தர்)

குழந்தை தன் விளையாட்டில் ஈடுபட்டிருக்கும்வரை தாய் தன் வேலைகளைக் கவனித்துக்கொண்டிருக்கிறாள். பசி ஏற்பட்டவுடன் குழந்தை அழ ஆரம்பித்துவிடுகிறது உடனே நிறுத்திவிட்டு ஓடோடி வருகிறாள், குழந்தையை எடுத்துக்கொள்ள. விளையாட்டில் மகிழ்ந்து கொண்டிருந்த சிசு அழக்காரணம் என்ன? பசி என்ற வருத்தம் அல்லவா? இவ்விதம் உலக விஷயங்களில் ஈடுபட்டிருக்கும் வரையில் தாய் உமை நம்மிடம் வருவதில்லை. நாம் அவளை நினைப்பதேயில்லை. துன்பம் வந்தகாலத்துத்தான் அன்னையின் நினைவு ஏற்படுகிறது. அப்பொழுது உலக மாதாவை என்றும் நினைத்துக் கொண்டிருக்க வேண்டுமானால் துன்பம் வந்துகொண்டே இருக்கவேண்டுமல்லவா? இன்பம் ஏற்படும் காலை பகவானது ஞாபகம் வருவதில்லை. அல்லலுறும் பொழுதுதான் ஆண்டவனை நினைக்கத் தோன்றுகிறது.

மகாபாரத யுத்தம் முடிந்து வனவாசம் செய்யக்கிளம்பிய குந்தி தேவி கண்ணபிரானிடம் விடைபெற்றுச் செல்ல வருகிறாள். அவளை ஏதாவது வரம் கேட்குமாறு பரமாத்மா கூறுகிறார். அப்பொழுது என்னகேட்டாள் குந்திதேவி நல்ல அரசபோகம் கேட்டாளா? இல்லை. மைந்தர்களின் சுகத்தை யாசித்தாளா? இஃதொன்றையும் கேட்காமல் எனக்கு எப்பொழுதும் துன்பத்தையே தந்துகொண்டிரு என்று யாசித்தாள். இப்படிக்கூட ஒரு பைத்தியம் இருக்க முடியுமா? என்று நமக்குத்தோன்றுகின்றது. உண்மையில் நாம்தான் அறிவிலிகள்.

ஏன் அப்படி அவள் கேட்டாள்? துன்பம் எப்பொழுதும் வந்துகொண்டே இருந்தால் இடைவிடாமல் ஆண்டவனை நினைத்துக் கொண்டிருக்க முடியுமல்லவா?

இதனால்தான் போலும் பக்தர்களுக்குப் பலதுன்பங்களைத் தருகிறார் பகவான். துன்பத்தைத் தந்து அவர்களை விரைவில் தம்மிடத்து அழைத்துக்கொள்கிறார். அவனை சீக்கிரத்தில் அடைய துன்பம் வழியானால் அது இறைவன் தந்த பரிசல்லாமல் வேறு என்னவாக இருக்கமுடியும்.



# கண்ணன் காட்டும் கர்மயோகம்.

(செல்வி C. மாதர் நாச்சியார்)

உலகில் தோன்றிய மனிதன் உடலினாலோ அல்லது மனதினாலோ வேலைசெய்யாதிருக்க முடியாது. சூழ் நிலையின் தூண்டுதலினாலோ அல்லது இயற்கையாக அமையப்பெற்ற சுபாவக் குணத்தினாலோ மனிதன் யாதாவதொரு தொழிலைச் செய்து கொண்டேயிருக்கிறான். ஒவ்வொரு செயலுக்கும் பலன் உண்டு அது நன்மையாகவோ-தீமையாகவோ இருக்கலாம். காரண காரியக் கூட்டுறவினால் கவ்வப்பட்டு நிகழும் செயல்கள் யாவும் கர்மவிளைவுக்கும் கட்டுப்படுகிறது. ஆனால் மனிதனே செயலாற்றும் பிராணி. ஒவ்வொரு சிந்தனைக்கும்-உள்ளத்தில் உதிக்கும் எண்ணத்திற்கும் பிரதிபலன் உண்டென்றால் சதாகாலமும் கர்மவினையெனும் கடுமையான விதியினால் தாக்கப்படுவதில் ஆச்சரியமில்லை.

இங்குதான் கண்ண்ன் பகவத்கீதையில் காட்டும் கர்மயோக மார்க்கம் மனித சமுதாயத்திற்கு வழிகாட்டுகிறது. மனிதன் ஒரு செயலில் ஈடுபடும்போது விருப்பினாலோ அல்லது வெறுப்பினாலோ வசப்பட்டு-வெற்றி தோல்விகளுக்கு முக்கியத்வம் கொடுத்துச் செயலாற்றுவதினால்தான் வினையின் பலன்கள் மனதில் பதிந்துவிடுகின்றன. இந்தக் கர்மவினையின் பிடியிலிருந்து தாண்டுவதற்குக் கண்ணன் கூறிடும் அறிவுரை என்னவென்றால் துன்பத்தில் மனம் கொடாது, இன்பத்திலே ஆவலுற்றுபயத்தையும் கோபத்தையும் நீக்கி சமபுத்தியோடுதொழில் புரி, ஆனால் செய்கையின் பயனைக் கருதாதே என்பதேயாகும்.

பொதுவாக ஆத்மீக வாழ்வில் ஈடுபடும் சாதகன் கடமைகளைத் துறந்து மக்கள் சமூகத்தினின்றும் பிரிக்கப்பட்டு காட்டிலே தனிமையாகக் கண்மூடி மௌனியாகிக் காலத்தைக் கடத்துவதே கடவுளை அடையச் சிறந்த முறையென்றதோர் கொள்கையும் இருந்தது. இந்தக் கொள்கையை மாற்றிப் பற்றில்லாமல் தொழில் செய்து கொண்டிருக்கும் மனிதன் பரம்பொருளை எய்துகிறான் என்ற புதியதோர் புனிதக் கொள்கையை கண்ணன் கருணையோடு விளக்குகிறான். ஆத்மாவில் இன்புற

## சிரத்தையுடைய சீடனால் குருவுக்கு

# பரமசிவ தரிசனம் கிடைத்தது.

(சுவாமி நிர்மலானந்தா, ரிஷிகேசம்.)

மதுரை ஜில்லாவில் வைகைக் கரையில் ஒரு சிறிய கிராமத்தில் அமரன் என்ற ஒருவன் இருந்தான். அவன் இளவயதில் சரியாக படிக்கவில்லை. பிற்காலத்தில் தகாதவர்களுடன் சேர்ந்து கெட்டு தனக்கு வேண்டிய செலவுகளுக்கு மக்களைப் பயமுறுத்தியும் ஏமாற்றியும் பணம் தேடி வாழ்ந்தான். இவனுக்கு நல்ல புத்திவரவேண்டி மாதா பிதாக்கள் எவ்வளவு முறை உபதேசித்தும் பயனில்லாமல் அமரனிடம் அடிபட்டதுதான் மிச்சம். இந்தக் கஷ்டத்தில் கல்யாணமும் செய்து வைத்தார்கள். அவன் தன்னிடம் தினமும் கையில் கத்திவைத்துக்கொண்டேதான் திரிவான். பாதைகளில் யாரையும் கண்டுவிட்டால் கத்தியைக் காட்டி பயமுறுத்தி பணத்தைப் பிடுங்குவது வழக்கம். இப்படியாக வாழ்வு இருளில் நடந்தது.

அமரனுக்கு உலகத்தில் ஏதும் தெரியாது திரியும் சமயம் சில தினம் அவனுக்குத் திருட்டுக் கிடைக்கவில்லை. இவன் திரியும் ரோட்டில் சில அந்தணர்கள் நன்றாகக் குளித்து வீபூதி

---

முற்பக்கத் தொடர்ச்சி.

றுத் தொழிற் பயனிலே பற்று அற்றவனாய், எப்போதும் திருப்தியுடையோனாய் எதினினும் சார்பற்று நிற்போன் தொழில் செய்தாலும் அதனால் கட்டுப்படுவதில்லை. செய்கைகளை எல்லாம் பிரம்மத்தில் சார்த்திவிட்டுப் பற்றுதலை நீக்கித் தொழில் செய்கிறவனைக் கர்மவினைகள் பந்தப்படுத்துவதில்லை. வெளி விஷயங்களில் மனப்பற்று இல்லாமல் செய்கையில் செயலின்மையைக்கண்டு எங்கும் எல்லாச் சூழ்நிலைகளிலும் பாதிக்காது கருமத்தில் கருத்துவைக்காது காரியங்களைத் திறமையாகச் செய்வதே கர்மயோகத்தின் ரகசியமாகும். நன்மை தீமைகளைப் போக்கி, ஐயம் அகற்றி, இந்திரியங்களை அடக்கி, எல்லா உயிர்களின் நன்மைக்காகச் செயல் புரிவதே வினைப்பயனிலிருந்து விடுபடச் சிறந்த முறையாகும். இதுவே கண்ணனின் உயரிய-உன்னத உபதேசமாகும்.



தரித்து சிவசிவ என்று சொல்லிப் போவார்கள். நம் அமரன் ஒருநாள் அவர்களை அணுகினான். ஆனால் அவர்கள் பயந்து ஓடத்தொடங்கினார்கள். அமரனும் விடாது பின் தொடர்ந்து ஓடினான். அவர்களைப் பிடித்துத் தாங்கள் இந்த ரோட்டில் தினம் போகும் காரணம் என்ன? என்று வினவ, அவர்கள் எங்கள் குருநாதரிடம் உபதேசம் பெற்று வரப்போகிறோம் என்றார்கள். அப்படியானால் என்னையும் அழைத்து செல்லுங்கள் என்று கேட்டான். அவர்கள் முடியாது என்றார்கள். சில தினம்வரை பொறு பின் கூட்டிச் செல்லுகிறோம் என்றார்கள். உடனே இல்லை இப்போதே கூட்டிச்செல்ல வேண்டும் இல்லையானால் இந்தக் கத்தியால் குத்திக்கொலைசெய்வேன் என்றான்.

உடனே அந்தணர்கள் பயந்து நீ எங்களுடன் வந்தால் வெளியில்தான் இருக்கவேண்டும் என்றார்கள். அதற்கு சரி என்று ஒப்புக்கொண்டு கூடவே சென்றான். குருவின் உபதேசம் நடக்கும் இடத்துக்கு வெளியே இருந்துகொண்டு உள்ளே குருநாதர் நடத்தும் ஆத்மஞான உபதேசங்களை வெகு கவனமாய் உட்செவியால் கேட்டுவந்தான். இப்படிப் பலநாள் அந்தணர்களுடன் வந்துபோய்க்கொண்டிருந்தான். ஒருநாள் ஏன் நாம் தனியாகக் குருவிடம் போகக் கூடாது என்று எண்ணி அந்தணர்கள் வருவதற்கு முன்பாகச் சென்று குருவினிடம் அந்தணர்கள் நமஸ்காரம் செய்வதுபோல் தானும் செய்து கைகூப்பி நின்றான். குருவோ இவனை நீ யாரப்பா என்று வினவ அமரன் தான் சிலநாளாக இங்குவந்து வெளியே இருப்பதாகச் சொன்னான். ஏன் நீ உள்ளே வரக்கூடாது தாராளமாக உள்ளே இருந்துபடித்துவா என்றார். அதுபோல் உள்ளே இருந்தான். அந்தணர்கள் வந்து பார்த்து பயந்துவிட்டார்கள்.

அன்றையத்தினம் நடக்கும் வேதாந்தபாடங்கள் நடந்தன அதில் வெகு சிரத்தையாய் இருந்து கவனித்து வந்தான் அமரன். இரவு நேரம் ஆகியது சீடர்கள் குருவிடம் விடைபெற்று வீடு திரும்பினார்கள். ஆனால் நம் அமரன் இருந்த இடத்தை விட்டு ஆடாமல் அசையாமல் இருந்தான். குருநாதர் அப்பா நேரம் ஆகிவிட்டது இனி நீ வீடு போகவேண்டாமா? என்றார். நானும் வீடுபோகவேதான் இங்கு இருக்கிறேன் என்று சொல்லி தங்களிடம் ஒருசந்தேகம் கேட்டுப்போக ஆசை என்றான். குருநாதரோ சந்தோஷத்துடன் என்ன உன் சந்தேகம் என்

றார். எல்லோரும் தங்களிடம் உபதேசம் வாங்குவதாகச் சொல்லுகிறார்களே அது என்ன? என்றான். அப்பா உபதேசம் என்பது எளிது அல்ல. சிலகாலம் குருவிற்கு சேவை செய்து அதற்குப்பின் குருநாதர் உபதேசிப்பார் என்று சொல்ல உடனே அமரன் எனக்கு கிடைக்காததோ என்றான். குருநாதர் நீயும் 12 வருடம் சேவை செய்தால் கிடைக்கும் என்று சொல்ல குருதேவர் எனக்குத் தாங்கள் அதை இப்போதே தரவேண்டும் என்றான். குருநாதர் அது எப்படிப் பக்குவம் இல்லாத உனக்கு உடனே உபதேசம் தரமுடியும் குறைந்தது ஆறுமாதம் நீ வந்து போ பின்னால் பார்க்கலாம் என்றார். உடனே அமரன் தன் கைகளை மடித்து இப்போது தருகிறீர்களா? இல்லையானால் என்ன செய்வேன் தெரியுமா என்று பயமுறுத்தினான். அது சமயம் குருநாதர் தனியே வேறுயாரும் கிடையாது. பயந்து இன்று அகப்பட்டுக்கொண்டேன். முரடன் ஏதாவது செய்துவிடுவான் என்று பயந்து பொறு நான் சொல்லுவதை வெகு சிரத்தையாய்க் கவனி என்று சொல்லி சிவ சிவ என்று சொல்லு என்றார். உடனே சிவ சிவ என்றான். நான் சிவ சிவ என்று சொன்னால் சிவன் ஆக முடியுமா? என்றான். ஆமா நீயே சிவன் என்றார். உடனே நான் சிவன் ஆனால் தாங்கள் யார் என்றான். நானும் சிவமே என்றார். அப்படியானால் குருசிவா இங்குவருபவர்கள் எல்லோரும் யார்? எல்லோரும் சிவமேதான். நீ எதை எல்லாம் பார்க்கிறாயோ அவை எல்லாம் சிவமேதான். அதைத் தவிர வேறு கிடையாது என்றார். உடனே அமரனுக்குச் சிவபோதை உண்டாகிவிட்டது. குருசிவா சிவ சிவ போய்வரட்டுமா என்று விடைபெற்றான். குருநாதரும் சனி விட்டதென்று கதவைத் தாளிட்டார்.

அமரன் சிலநாளாக வீடுபோகவில்லை. தாய் தந்தை மனைவிகள் முரட்டு அமரன் எங்கோ போய்விட்டான் என்று இருந்தார்கள். அமரன் குருவினிடம் விடைபெற்று சிவ சிவ என்று வழியில் காணும் மாடு ஆடு நாய் மனிதர்கள் யாரைக் கண்டாலும் சிவ சிவ என்று இரு கைகூப்பி சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து கொண்டே வீடு போனான். அவன் தந்தை அமரா எங்குபோய் இருந்தாய் பல நாள் வீடுவரவில்லையே என்றார். உடனே சிவ சிவ என்று நமஸ்கரித்து என்ன இருக்கிறது சிவா இந்த வீட்டில் பெரிய வீடான சிவ சிவ இருக்கிறபோது



என்றான். தகப்பன் ஏதோ நம் பயலுக்கு நல்ல புத்தி வந்துவிட்டது என்று நினைத்தார்.

அதன்பின் தாய் வந்தாள். அப்பா அமரா எங்கு போய் இருந்தாய் ஒருவாரமாய்ச் சாப்பிட வரவில்லையே என்றாள். சிவ சிவ என்று நமஸ்கரித்து என்ன சிவா சாப்பாடு இந்த சிவ சிவ சாப்பாடு அல்லவோ சாஸ்வதம் என்றான். தாய் அட மூடா உனக்கு யாரோ ஏதோ செய்துவிட்டார்கள் என்று கதறினாள் என்ன சிவ சிவ என்றான்.

அதுசமயம் மனைவியும் வந்து எங்குபோய்த் தொலைந்தீர்கள் இத்தனைநாளாய் என்று கவலையாய்ச் சொன்னாள். உடனே அமரன் சிவ சிவ என்று நமஸ்கரித்தான். மனைவி பயந்து தன் கணவனுக்கு ஏதோ சிவப்பேய் பிடித்து இருப்பதாக கதறி அழுதாள். யார் அறிவார்கள் அமரன் சிவமயம் ஆனதை. சிவன்தான் அறிவான். சிலநாள் அமரனின் சிவப்பேய் போக்கச் செலவு செய்தார்கள். எப்படிப் போகும். யாரைக் கண்டாலும் சிவ சிவ என்று நமஸ்கரித்து விழுந்து கும்பிடுவது போகவில்லை. இதற்குள் சரீரபந்தம் விலகிக்கொண்டே வந்தது. ஆகாரம் இல்லை. உடை நழுவது தெரியவில்லை. உறக்கம் இல்லை. அமரன்முன் காணுவதெல்லாம் சிவமயம். அவனும் அதுவாய்த்தான் இருக்கிறான். இதை அந்தண சீடர்களும் கண்டு இவன் மடையன் என்று நினைக்கிறார்கள். அவர்களைக் கண்டு சிவ சிவ என்று நமஸ்கரிக்கிறான், ஒருநாள் குருநாதர் அந்தண சீடர்களை நோக்கி நான் அடுத்த கிராமமான மலையடிவாரத்துக்குப் போகவேண்டும் யாராவது ஒருவர் நாளை என்கூட வாருங்கள் என்றார். சீடர்கள் எல்லோரும் மலையடிவாரத்துக்குப் போக பயம். ஆகையால் எல்லோரும்கூடி நம் முரட்டு சிவ சிவ பைத்தியத்தை போய் சொல்லி போகச் சொல்லலாம். என்று திட்டம் இட்டார்கள். உடனே அமரசிவவைக்கண்டு நாளை நம் குருசிவா அடுத்த ஊருக்குப் போகிறார் நீ போய்ச் சேவை செய்துவா என்றார்கள். உடனே அதற்கு என்ன சிவா நம் குரு சிவாவுக்குச் சேவை செய்யாது யாருக்கு சிவா செய்கிறது என்று அந்தச்சமயமே குருநாதரிடம் சென்று குருசிவா சிவ சிவ என்று விழுந்து நமஸ்கரித்து நின்றான், ஆனால் குருநாதர் சனி வந்துவிட்டதா என்று பயந்து ஏன்டா இங்குவந்தாய் என்றார். இல்லை குருசிவா தாங்கள் ஊருக்குப் போகிறதாகவும் நான் சேவை செய்ய வேண்டுமென்

றும் நம் சிவ சிவ சொன்னார்கள். இதைக்கேட்ட குருநாதர் நீ வராதே என்று சொன்னால் பயல் என்ன செய்வானோ என்று பயந்து சரி காலையில் நம் சாப்பாட்டுக்கு வேண்டிய சாமான்களையும் எடுத்துவா என்றார். உடனே அமரசிவன் வீடு சென்று 100 பேருக்கு வேண்டிய சாமான்களுடன் வந்து சேர்ந்தான். என்னடா இத்தனை சாமான். நம் இருவருக்குத்தான் வேண்டும்

இல்லை குருசிவா நாம் உண்ணும் சமயம் வேறுயாரும் சிவா வந்துவிட்டால் நாம் எப்படிச் சாப்பிடுவது என்றான். பார்த்தார் குருநாதர் இவன் நான் சொன்ன வாக்கியத்தை பலமாகப் பிடித்துவிட்டான். இனி இவனை மாற்றமுடியாது என்று சரி சாமானைத் தூக்கிப் புறப்படு என்று இருவரும் பயணமானார்கள். அமரன் சிவமயத்தால் பாரம் தெரியாது வழியில் காணும் சகல சீவர்களை எல்லாம் சிவ சிவ என்று நமஸ்கரித்துச் செல்லுகிறான். மதியநேரம் ஆகியது மலையடிவாரம் சிறு வாய்க்கால் போகிறது. குருநாதர் சிவசிவ நீ சமைத்துவை நான் போய் ஸ்நானம் செய்து பூசை முடித்து வருகிறேன் என்று சொல்லி வாய்க்கால் சென்றார். அமரன் சிவ சிவ என்று சகல ஆகார சாமான்களையும் போட்டு சமையல் செய்து 100 இலையும் போட்டு ஆகாரத்தை பரிமாறிவிட்டான். குருநாதர் வந்து இவ்வளவு இலை எதற்கு? கொண்டுவந்த சாமான்களை எல்லாம் சமைத்து விட்டாயா என்றார். நாம் சாப்பிட ஆரம்பித்த சமயம் வேறு சிவம் வந்துவிட்டால் அவர்களும் சாப்பிடலாம் குருசிவா என்றான். இவனிடம் மறுத்துப் பேசினால் கஷ்டம்என்று சரி சாப்பிடலாமா என்று உட்கார்ந்து தன் இலையில் கையை வைத்தார். அது சமயம் சரியான வேங்கை வரிப்புலி ஒன்று வேகமாகப் பாய்ந்துகொண்டு வந்தது. அதைக் கண்டதும் குருநாதர்பயந்து மரத்தின்மேல் ஏறிக்கொண்டார். ஆனால்அமரன் வெகு மகிழ்ச்சியுடன் அந்த வேங்கையை வரவேற்று இரு கை கூப்பி விழுந்து நமஸ்கரித்து சிவ, சிவ, தங்கள் வருகையைத் தான் எதிர்பார்த்து இருந்தேன். இனிச்சாப்பிடலாம் என்று சொன்னான். ஆனால் அது நம் அமர சிவ சிவ முன்னால் கன்று போல் விளையாடியது. சிவா நேரம் ஆகிறது முதலில் ஆகாரம் செய்யுங்கள் என்று அதன் கழுத்தைப் பிடித்து இழுத்துவந்து இலைக்கு முன் விட்டான். ஆனால் அது அங்கு வந்து படுத்துவிட்டது. சிவ சிவ நான் வாயில் தருகிறேன் என்று சொல்லி அதன் வாயில ஒவ்வொரு இலையாக 98 இலை ஆகாரத்தையும் கொடுத்தான். அச்சமயம் இன்னும் 2 இலைபாக்கி. ஆனால் சிவா



ஒன்று குருசிவாவுக்கு; ஒன்று எனக்கு. ஆனால் தங்களுக்கு இன்னும் பசியானால் என் இலையைத் தருகிறேன் என்று கொடுத்தான் ஆனால் புலியோ விடாது குருசிவா இலைக்குச் சென்றது. முடியாது, முடியாது, என்று சொன்னான். அச்சமயம் இவன் பக்தியைக் கண்ட பரமேஸ்வரன் அமரா நான் யார் தெரியுமா பரமசிவம் உனக்கு ஏதும் வரம் வேண்டினால் தருகிறேன். உனக்குக் காட்சி தரவேதான் வந்தேன் என்றார். ஆனால் சிவ சிவ என் குருநாதர் ஒரு சிவன் தான் சொன்னார்கள். தாங்கள் பரமசிவம் என்று சொல்கிறீர்கள். எனக்குக் குருநாதர் சொல்லவில்லையே என்றான்; இங்குதான் இருக்கிறார். தாங்கள் இருங்கள் குருசிவாவைக் கூட்டிவருகிறேன் என்று ஓடினான். ஆனால் பகவான் பக்தனுக்காகப் புலியாக வந்து காட்சி கொடுத்தவர் திரிசூல தாரியாய் நின்றார். அமரன் குருவைத்தேடி மரத்தின் மேல் ஏறி குருசிவா பரமசிவமாம் வந்திருக்கிறார். தங்களைக் கூப்பிடுகிறார் என்று சொல்லிக் கூப்பிட்டான். குருநாதர் பயந்து நின்றவர் மேலும் பயந்து பின் விவேகத்தால் தெளிந்து இவன் சிவமயமாய்ச் சகலத்தையும் காணுபவன் ஒருசமயம் இறைவனே புலிவடிவில் வந்துஇருக்கலாம் என்று மரத்தை விட்டுக் கீழே இறங்கினார். புலி என்று பயந்தவருக்கு அதைக் காணவில்லை. இறைவன் திரிசூலதாரியாய்க் காட்சி கொடுத்து அமரனைச் ஜோதியில் மறைத்து தானும் மறைந்தார்.

இன்று நம்முன் கடவுள் வந்தாலும் நாம் நம்பமாட்டோம். ஆனால் அமரன் குருவாக்கை வேதவாக்காகக்கொண்டு தன் சிரத்தையால் சில நாளில் கடவுள் தரிசனம் செய்து நிழலில் கலந்து விட்டான். வேதங்கள் படித்தும் உபதேசித்தும் ஆனால் காணமுடியாப் பரவஸ்துவான பரம்பொருள் இறைவனையே சீடனால் தெரிசித்தார். இன்று நாம் ஆராய்ச்சியில்தான் செல்லுகிறோம். ஆண்டவனும் நம்மைவிட்டு விலகியிருக்கிறார். எவன் சிரத்தை பக்திகொண்டு அவனை நினைக்கிறானோ அங்கு ஆண்டவன் வருகிறான். ஏன் ஒரு கூட்டுப் புழுவைக் கொண்டு போய் ஒரு குளவி அதைச் சில நாளில் குளவியாக்குகிறது. அது புழு என்பதை மறந்து தன் வடிவாக மாற்றிவிடுகிறது. ஏன்? நாமும் நம் உண்மை வடிவை மறந்து விட்டதால்தான் இறைவன் இருப்பதும் தெரியமுடியவில்லை. வித்தில் மரம் இருப்பது உண்மைதானே அதுபோல் மனிதன் இடம் மனுஈசன் இருக்கிறான். அமரசிவனுக்குக் கிடைத்தபேறு நம் அனைவருக்கும் கிட்டுமாக சர்வம் சிவமயமே.

# கடைக்கண் பாராய்!

நினைந் துன தடியில் வீழ்ந்து
நெஞ் செலாம் உருகி நைந்து
தினம் தொழும் அடியா ருள்ளச்
செழு மலரிடையே பொங்கும்
மன அழுக் கொழித்து, ஞான
வாழ் வளித் திடும் ஓங்கார
கனல் தெறித் திடு முக்கண்ணீ!
கடையேன் உய்ந்திடக் கண் பாராய்!

அன் பிலா நெஞ்சத்தேன், நல்
லறிவிலாப் பழுத்த மூடன்
நின் திரு நாமம் ஓதி
நிகரிலா தடி யி ணைக்கே
புன் கவி மாலை சூடிப்
போற்றிடப் பெறுத நெஞ் சே!
என் பயன் பெற்றேன் உன்னால்?
எரித்திடாய் கணத்துள் தாயே!

எத்துணை கோடி இன்னல்
எளியனைச் சூழ்ந்தபோதும்
சித்தத்தில் உறுதி பொங்கி
தெளிந்த நல் லறிவு பூணும்
புத்தரைப் போன்ற, வீர
புனித மெய்ஞ் ஞான வாழ்வை
சக்தி ஓம் சக்தி! நீயே
தன யனுக் கருள வேண்டும்

பொன்னுத்தம்பி





'உபநிஷத்' உண்மைகள். (தொடர்ச்சி)

# வித்தை - அவித்தை.

'சிரேயஸ்' 'பிரேயஸ்' என்பனவற்றைப் பற்றிக் குறிப்பிட்ட யமன், தன்னை வினவிக்கொண்டிருக்கும் நசிகேதஸ் 'சிரேயன்' — உயர்ந்த நன்மையை நாடும் பண்பு — உள்ளவனாயிருத்தலைக் கண்டுகொண்டான்.

உலகிலே ஒருசிலருக்குமட்டுந்தான் உயர்ந்த நன்மையை நாடும் பண்பு உண்டாகிறது. ஏனையோர் அவ்வப்போதைக்குத் திருப்தி யளிக்கக்கூடிய இழிந்த நன்மைகளையே நாடுகின்றார்கள். ஏன் இந்த வேறுபாடு? என்ற வினவுச்கு விடையளிப்பான் போன்று யமன் பேசுகின்றான்.

வித்தை என்றால் 'அறிவு' என்பது பொருள். அவித்தை என்றால் 'அறிவீனம்' என்பது பொருள். ஐம்புலன்கள் வாயிலாக நம்முள்ளத்திலே வந்து விழுகின்ற எல்லாவற்றையும் நாங்கள் அறிந்து கொண்டுதான் இருக்கின்றோம். ஆகவே எல்லாம் அறிவுதான் என்றிருப்பது சாதாரண கருத்து. அறிவு என்ற சொல்லுக்குக் கொடுக்கக்கூடிய பொதுப்படையான வரைவிலக்கணம் இது. நம்மவர் இந்த வரைவிலக்கணத்திலே ஒருவேளை திருப்தி யடையலாம். ஆனால், பெரியவர்கள் ஒருபோதும் இதில் திருப்தி யடைவதில்லை. 'மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்ற வரையறுக்கப்பட்ட ஒரு வரைவிலக்கணத்தை அவர்கள் கையாளுகின்றார்கள். உயர்ந்த பொருளை, உண்மையான பொருளை, நித்தியமான பொருளை அறியும் அறிவே 'அறிவு அல்லது வித்தை' எனப் பெயர் பெறும். அங்ஙனமின்றி, இழிந்த பொருளை, பொய்ப் பொருளை, அநித்தியப் பொருளை அறியும் அறிவு ஒரேயடியாக 'அறிவீனம் அல்லது அவித்தை' என்றே பெயர் பெறும்.

இந்த வித்தையும் அவித்தையும் மனிதனைக் கொண்டு செல்லும் பாதைகள் ஒன்றுக்கொன்று எதிரானவை. அவித்தை தற்பெருமையை உண்டாக்கிவிடுகின்றது. தானே தீரன், தானே பண்டிதன் என்ற எண்ணத்தை வளர்க்கின்றது. உல

கபாசத்திலிருந்து பேரப்பிரியவொட்டாமல் மனித உள்ளத்தை வரிந்து பிணித்துக் கொள்கின்றது. வித்தையின் செயல் அப்படியன்று. அது ஒவ்வொருவனுக்கும் அவனவன் சிறுமையையே உணர்த்திக் கொண்டிருக்கின்றது; தன்னிழப்பை உண்டாக்கி விடுகின்றது. எந்த வகையான பந்தங்களிலுமிருந்து உள்ளத்தை உடனடியாகவே விடுவிக்கச் செய்கின்றது.

அவித்தை வசப்பட்டவன் தான் தருக்கடையாதது மட்டுமன்றி மற்றவர்களையும் பிழையான வழியிலே நடத்தி விடுவான். குருட்டிற்குக் குருடு வழிகாட்டுவது போல்வது அவன் செயல்,

"குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடுங் குருடுங் குருட்டாட்ட மாடிக்
குருடுங் குருடுங் குழிவிழு மாறே" திருமந்திரம்.

வித்தையுடையவனிடத்தில் இத் தடுமாற்றம் ஏற்படுவதில்லை.

உலக வாழ்விலே ஈடுபட்ட நாம் நித்திய பொருளை மட்டுமன்று அநித்தியப் பொருள்களையும்; அழியாப் பொருள்களை மட்டுமன்று அழிவுப் பொருள்களையும் அறியவேண்டியவர்களாகவே இருக்கின்றோம். ஏனெனில், அவை நம் நாளாந்த வாழ்விற் பயன்படுவன. அதற்காக, அவற்றின் மேல் அழுந்திய பற்றும், தழும்பேறிய உணர்ச்சியுங் கொண்டுவிடுதல் ஆகாது. அவற்றை வெறுமனே கண்டு கழிக்குமளவில்தான் நடந்து கொள்ளுதல் வேண்டும். அழுந்திய பற்றும் தழும்பிய உணர்ச்சியும் வித்தையிலேயே ஏற்படவேண்டும். அதுவே விவேகத்துக் கேற்றதாகும். அதுவே அறிவுத் தர்மமாகும். அதைக் கடைப் பிடிக்க வேண்டுவது நம் ஒவ்வொருவர் கடைமயாகும். அங்ஙனமன்றி, அற்ப சுகத்திற்காக அவித்தையைப் பற்றி நிற்பின், பின்னொருநாள்,

"அற்ப சுகத்தை நினைந்தோம்
அறிவுக் கறிவை யிழந்தோம்"

என்றெண்ணி யெண்ணி நிச்சய்மாகப் பச்சாத்தாப முறுவோம்.

"சிரேயஸ்" என்ற பண்பைத் தருவது வித்தை. "பிரேயஸ்" என்ற பண்பைத் தருவது அவித்தை. எனவே ஒருவனிடம் "சிரேயஸ்" உண்டா; பிரேயஸ்" உண்டா? என்பதில் அவனிடம் வித்தையுண்டா, அவித்தையுண்டா? என்ற ஆராய்ச்சியிலே கிடைக்கும்.



# முக்குணப் போராட்டம்.

(சுவாமி அமரானந்தா, ரிஷிகேஸ்.)

மனிதனின் மூன்று குணங்களான தத்வ, ரஜஸ், தமஸின் போராட்டத்தை விவரிக்கிறது இந்நாடகம். ஒவ்வொரு குணங்களின் சக்தி பரிணும நிலையடைந்தபோது நடந்த விவாதத்தை விவரிக்கிறது இந்நாடகம். உலகத்தைத் துறந்த ஒரு ஆரம்ப சாதகனின் மனப் போராட்டமே இந்நாடகம்.

சத்துவத்திற்கு—வெள்ளை நிறம்
ரஜஸ் —சிவப்பு நிறம்
தமஸ் —கறுப்பு நிறம்

## காட்சி 1.

**சத்துவர்:-** மனிதா! சிவானந்தர், இரமணர், இராமகிருஷ்ணர் எழுதிய புத்தகங்களைப் படித்தும், உன்னில் உலகில் எது உண்மை எது பொய் என்ற ஞானம் உண்டாகவில்லையா? மனைவி, மக்கள் அன்னை, தந்தை, தம்பி உறவெல்லாம் பொய்யடா! காலம் முழுவதும் காமத்திலுழன்று காலனுக்கிரையாகாதே. மிருக வாழ்வாம் இனம் பெருக்கும் வாழ்வை மறந்து அமர வாழ்வாம் யோகிகளுடைய வாழ்வை மேற்கொள் சுற்றமனைத்தும் உன்னைச் சூழ்ந்திருந்து அவரவர்களது சுய நலத்தை நாடியே, உனது நலத்தை நாடிச் சூழும் யோகமே, உன்னுடன் தொடர்ந்து வரும். எனக்கு நலம் செய்யும் சுயநலமற்ற சுற்றம். சுற்றத்தின் மேலுள்ள பற்றை அறு. வெறும் சாரமற்ற வாழ்வு வாழ்ந்து வாழ் நாளை வீணாக்காதே. கிளம்பு இன்றே அனைத்தையும் விட்டு ரிஷிகேசம் அடைக்கலம் புகு அன்னை போல் அன்பு சொரியும் சிவானந்தரிடம்.

**ரஜஸ்;-** போதும் நிறுத்து உபதேசத்தை பத்து மாதம் சுமந்து பெற்று, சகல விதமான கஷ்டங்களோடு படிக்க வைத்து உன்னை ஓர் ஆளாக்கிய அன்னையின் கதி என்ன? காலம் முழுவதும் காப்பாற்றிய அன்னை தந்தை இவரை நீத்து என்ன துறவு. துறவென்பது அகத்துறவாகும். புறத்துறவு அல்ல.

அகத்துறவை மேற் கொள். அகத்தில் இரு. முட்டாள்தனமான எண்ணத்தால் துறவு பூண்டு முழிக்காதே 'ஐயோ ஏன் எடுத்தோம்! எவ்வளவு கடினமான பாதை; நம்மால் முடியவில்லையே அதன்படி நடக்க' வென்று வருந்தாதே பின் நீ இப்பொழுது செய்யப்போகும் மாற்றவியலாத பிழையால்.

**தமஸ்:** ஆஹா ரஜஸே! என்ன அழகான உபதேசம் கொடுத்தாய் அந்த சத்வத்திற்கு உலகம் பொய் என்று பறை சாற்றும் கூற்று முற்றும் பொய். எது பொய் எது மெய் மனிதனும் சகல ஜீவராசிகளும் போகப் பொருள்களை அனுபவித்தற்காகவே உலகம் படைக்கப்பட்டது இறைவனால். கண்காணாக் கடவுளை உண்டென்று நம்பி, சிந்தனையற்றுச் செல்லும் சிறு துரும்பே! விஞ்ஞான உலகு அணுசக்தி. ஜலசக்திக்குண்டுகள் உண்டென்று மெய்ப்பித்துக் காட்டிய இக்காலத்திலா கடவுளை பிறர்காண மெய்ப்பிக்காத முனிவர்களின் வார்த்தையில் நம்புவது! உலகமே அழகு! பெண் இன்பமே பெரும் இன்பம். அழகிய மனைவி, அன்னை, தந்தை, மக்கள் பாசமே உண்மை. விழித்திரு.

**சத்துவம்:** போதும் ரஜஸ், தமஸே நிறுத்துங்கள் ஆசை காட்டிக் கூட்டி மோசம் செய்யும் உங்கள் நடத்தை எனக்குத் தெரியும். பாசத்தில் பிணைத்துப் பலகோடி பிறவிகள் நீங்கள் உயர்ந்த நிலையாலும், நான் கீழ் நிலையில் உழலவும், நீண்ட ஆயுளோடு நீங்கள் வாழவும், வகுக்கும் படு சூழ்ச்சி நிறைந்த திட்டம். உங்கள் திட்டத்தைத் தகர்த்தெறிந்து சிங்கம்போல் நான் உலாவுகின்ற காலம் வந்துவிட்டது. ரஜஸே அன்னை. தந்தை, மனைவி மக்கள் இறந்ததும் இடுகாடு வந்து, பொய்யாகத் தாங்கள் என்னின்றும் பிரிந்து விட்டதாக நடித்து, அழுது முடிவில் மறந்து தம் வினை நோக்குவர்; அவர்களையா உறவு என்கிறாய்? மனைவி எவள்?

உலகம் தோன்றியதினின்று நாம் இதுவரை எவ்வளவு ஜன்மங்கள் எடுத்தோமோ உடுக்கும் உடை களைந்து வேற்றுடை மாற்றுவதுபோல், அவ்வளவு ஜன்மங்களையும் எவ்வளவு தந்தை, தனையர் வந்து போயிருப்பார்கள்; பலர் வந்து போயிருப்பார்களல்லவா? அவர்களுள் இவளும் ஒருத்தி. காணும் பாசம் காமத்தின் கூற்றே மனைவிமேல். உனது நெஞ்சில் கை வைத்துக் கூறு-என்றாவது உன் மனைவியை உடலிச்சையாம் காமத்தாலல்லாது சக்தியாகவோ தாயாகவோ கும்பிட்டிருக்கிறாயா? -இல்லை, நினைத்திருக்கிறாயா? இல்லை. அல்லது இல்லறவாழ்வில் என்றாவது விலங்கினத்திற்கும் மேலாக கட்டுத்திட்டத்தில் வாழ்ந்திருக்கிறாயோ சொல். நீ வாழும் வாழ்வு நரகம். காமத்தின் கண் உழன்று, கருவியாக அவளை நினைத்து, நீயும் அவளும் மேன் மேலும் நரகம் நோக்கிச் செல்கிறீர்கள். சதிபதி தருமம் இதன்று. வேள்வி, வேதபாராயணம், இறைவழிபாடு, சத்தியம், அஹிம்சை, பிரம்மசரியத்துடன் வாழும் வாழ்வே இல்லறம். அவ்வித இல்லறம் இல்லையேல் துறவறம் மேல். புறத்துறவு ஒரு வேலி. அதையேற்று அகத்துறவு என்னும் பயிரை விளைவிக்கலாம். சாதனை என்ற உழைப்பால்.

ஏ தமஸே! உனது விக்ஞானம் கண்டது அணுசக்தி. ஜலசக்தி இரண்டும்தான். இன்னும் காணலாம் "டெலிவிஷன்" போல் பலவற்றை. முன்னேறிய விக்ஞானம் எவருக்காவது இறந்தவருக்கு உயிர் கொடுத்து இருக்கிறதா? முதுமை போக்கியிருக்கிறதா!! அல்லது உயிராம் ஆத்மனைக் கண்டு இருக்கிறதா!!! அது நீர் கண்ணாடிப் புட்டியில் கலர் பரீக்ஷைகளைக் காண்பது போல் காண முடியாதது. அகக் கண்ணாடியை மும்மலம் நீக்கி சுத்தமாக்கு. அதில் பின் காணலாம் ஆத்மனை. விக்ஞானம் காணாத ஆத்மனைக்கண்டனர் பல்லாயிரம் வருடத்திற்கு முன்பே இந்திய நாட்டு முனிவர்கள். விண்டார்கள் ஓரளவு உலகிற்கு சாஸ்திர, வேத, உபநிஷத், கீதை வாயிலாக.

கண்டும், படித்தும், கேட்டும், கண்மூடி மௌனியாய் சமுசார சாகரத்தில் எதிர் நீச்சல் போடாது ஸாகர இழுப்பில் செல்வது எவ்வளவு மூடத்தனம். கண்ணிருந்தும் குருடர், செவியிருந்தும் செவிடர், வாக்கிருந்தும் ஊமையன்றோ!

களைந்தேன் காலமாம் பாசம். அடைவேன் நிழல் அடி ஈசன். பாடுவேன் அவன் நாதம் புனிதம் பெறவே இந்நீசன் அவன் புகழ் பாடி, ஜெபம் செய்து, கண்ணீர் மல்கும் கண்களுடன் கீர்த்தனம் செய்து அறுப்பேன் பிறவித்துன்ப வாசம். போதும் இதுவரை கேட்டுக் கெட்ட உங்கள் உபதேசம். செல்வேன் பரதேசம். ஒரு நிமிடம் இனி வாழ்வது ஒரு யுகமாகும்.

# என் இருபத்து நான்கு ஆசிரியர்கள்

( தத்தாத்திரேயர் )

## பாம்பு

பாம்பு ஜனங்களிடமிருந்து தனித்தே சாக்கிரதையாக வாழ்கிறது. தனக்கென்று அது ஒரு வீட்டைக் கட்டிக் கொள்வதில்லை. அதைப் போலவே முனிவனும் ஜனநாட்டமுள்ள இடத்தில் அதிகமாகத் தங்காமலும், அதிகமாகப் பேசாமலும், தனக்கென்று எதையும் வைத்துக் கொள்ளாமலும், ஒதுங்கியே வாழ வேண்டுமென்பதைப் பாம்பினிடமே கற்றுக் கொண்டேன்.

## சிலந்திப்பூச்சி.

ஒரு சிலந்தி தன் உடலிலிருந்தே உண்டான பொருளால் வலை பின்னுகிறது; அந்தவலையிலே விளையாடுகிறது; அதையே தின்றும் விடுகிறது. இவற்றையெல்லாம் கண்ட எனக்கு பிரம்மம் தன்னிடமிருந்தே பிரபஞ்சத்தைச் சிருஷ்டிப்பதையும், அதிலேயே ரமிப்பதையும் கடைசியில் அதனைத்தானே உண்டுவிடுவதுமான உண்மை புலப்பட்டது.

## குளவி.

குளவி ஒரு புழுவை எங்கிருந்தோ கொண்டுவந்து தன் கூட்டில் வைத்து எப்பொழுதும் அதைச்சுற்றிச் சப்தித்துக்கொண்டிருக்கிறது. அதனைக் கேட்டுப் புழு அந்தக் குளவியின் நினைவாகவே இருந்து, முடிவில் குளவியின் உருவத்தை அடைந்துவிட்டது இதிலிருந்து

அன்பி னாயினும் ஆசையி னாயினும்
வன்ப யத்தின் வயிரத்தி னாயினும்
நன்பெ ருந்திரு நாதனை யேநினைந்து
இன்பம் அவ்வுயிர் எய்து மென்பதை

அறிந்தேன். அப்புழுவின் மாற்றத்திலிருந்து அன்பினாலோ, பயத்தினாலோ, தீராப் பகையினாலோ எப்பொழுதும் பகவானை நினைத்துக்கொண்டிருந்தால் அவன் ஸ்வரூபத்தை அடைந்துவிடலாம் என்ற மேலான உண்மை எனக்குத் தெரியவந்தது.

யதுமகாராஜனே! இவ்வாறு ஜகத்தே எனக்குத் தத்துவத்தை உபதேசித்தது. அதிலுள்ள மேற்சொன்ன 24 பேர்களும் எனக்கு ஆசிரியர்களாகி தருமமான இது நல்லது; அதருமமான இது தீயது என்று என்று உபதேசித்தனர். இவற்றோடு என் உடலிலிருந்தும் நான் அறிந்துகொண்டவற்றைக் கூறுகிறேன் கேள். ஈசுவரனை அறிவதற்கு இந்த உடல் வேண்டியதே; அவன் எல்லாவற்றையும் படைத்தும் மனுஷ்ய சரீரத்தைப் படைத்த பின்புதான் அவனுக்குத் திருப்தி உண்டாயிற்று; 'அரிது அரிது மானிடராதல் அரிது' என்றபடி மனுஷ்ய ஜன்மம் கிடைப்பது மிகவும் அரியது; ஆனால் யமனுடைய ஆட்சிக்கு அதுவும் உட்பட்டதாதலால், அந்த ஜன்மாவைப் பெற்றநாம் நல்ல ஒழுக்கத்தில் அமர்தல் மிகவும் அவசியமானது—இறப்பும் பிறப்பும், தூங்குதலும் விழித்தலும்போல. ஆகையால் மனுஷ்யன் மற்றப் பிராணிகளைப்போல ஜனன மரண சமுத்திரத்திலேயே கிடந்து உழலாமல், முத்தியடையும் மார்க்கத்தைக் கடைப்பிடிக்கவேண்டும். விஷயசுகத்தில் ஆசைப்படுதலே பிறப்புக்குக் காரணம். ஆகவே இந்திரியங்களை அடக்கி ஆசையை நீக்கவேண்டும்; பிரமத்தை எங்கும் காணவேண்டும்; அதன்நிலையில் நிற்கவேண்டும். இதற்குரிய அறிவை நாம் ஜகத்தின் பலபகுதிகளிடமிருந்து பெறக்கூடும். இதனாலேயே 'நான் பலரை ஆசிரியராகக்கொண்டேன்' என்று கூறினார். யதுவும் அச்சொற்களைக் கேட்டுச் சகல ஆசைகளையும் ஒழித்துச் சமபுத்தி உள்ளவராக ஆனார் என்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் உத்தவருக்குக் கூறினார்.

(காமகோடி.)

---

முற்பக்கத் தொடர்ச்சி.

அழகு, உலகு. பாசம், மனதின் கற்பனை, மனதில் அனுதினம் பெறும் அனுபவம், ஓர் சொப்பனம். நான், எனது வினையின் தீமை, பலன் எல்லாம் அவ்விறைவனுக்கர்ப்பணம். கருவி மாத்திரமாய் அவன் ஆட்டுவிப்பதுபோல் ஆடுவது.

**ரஜஸ்:-** வேண்டாம் வீண்வாதம் தமஸ். அவன் செல்லும் வழி பார்ப்போம். பின் ஏளனமாய் நகைப்போம் வழி தவறினால்.

**தமஸ்:-** (இரகசியமாக) வைராக்கியம், துறவு, இவைகளின் தொடக்கம் நமக்கு வரும் காலனை நினைவூட்டுகிறது. அதனின் சாதனம் நமது வாழ்நாளின் தேய்வு. அதனின் முடிவு நம் இருவரின் ஆயுள் முடிவு. எனக்கு ஏதோ பயங்கரமாகத்தான் தோன்றுகிறது.

# தாகம் தீர்த்த தாள்.

(புவனா-இராமச்சந்திரா)

மழலை ததும்பும் பேதைப் பருவம்; மின்னொளி தவழும் இன்முகம்; குறுநகை மலரும் கோமள இதழ்கள்; கொஞ்சும் பார்வை ஆமாம் சின்னஞ் சிறு மோகனாவின் அழகு கண்டோர் உள்ளங்களைக் கவரும் அழகேதான்.

மாலை மங்கும் வேளை; வெளியே மலர் பறிக்கச் சென்றிருந்த தாய் தன் வீட்டு வாசற்படியை அடைந்தாள். வீட்டினுள் இருந்து கணீரென்ற குரலில் யாரோ "கண்ணா மணிவண்ணா" என்று அழகாகப் பாடும் குரல்கேட்டு சிந்தனையில் ஆழ்ந்தாள். அவ்வினிய குரல் தன் மூன்று வயதுக் குழந்தை மோகனாவின் குரல் என்று அவளால் நம்பவே முடியவில்லை. வழிபாட்டறைக்குள்ளே தன் கண்ணின் கருமணியான மோகனா, தன் விழிகளை மூடிய வண்ணம் கிரிதானின் நாமத்தைப் பாடிக் கொண்டிருந்த காட்சி அவருள்ளத்தைப் பரவசப் படுத்தியது. தாவியெடுத்து முத்தமிட்டு ஆனந்தக் கண்ணீர் பெருக்கினாள்; "அம்மா நான் கண்ணன் பெயர் சொன்னால் நீயேன் அழவேண்டும்" என்று குழந்தை கேட்டகேள்விக்கு விடையளிக்க முடியாத தாய் சேலைத் தலைப்பால் கண்களை ஒற்றிக் கொண்டாள். "இந்தப் பெயரை உனக்கு யார் சொல்லிக் கொடுத்தார்கள்?" என்று ஆவலோடு கேட்டாள் தாய். "அதுவா அம்மா! அன்று நீ சோறு கொடுத்தாயே, அந்தத் தாடித் தாத்தா சொல்லித் தந்தார். 'பாடிப் பழகு; நான் வந்து கேட்பேன்' என்று சொன்னார், இப்போ எனக்கு நன்றாகப் பாடத் தெரியும். ஏன் இன்னும் அவர் வரவில்லை?" தன் சின்னஞ் சிறு செல்வி கேட்பவைகளுக்கெல்லாம் பதில் கூற முடியாமலிருக்கிறதே என்று அந்தத் தாய் மனம் தத்தளித்தது. "அந்தத் தாத்தாவா! அவர் கட்டாயம் இன்னொருமுறை வருவார் கண்ணே!" என்று கூறிச் சமாளித்தாள்.

நாட்கள் பறந்தன; கண்ணன் நாமத்தைக் களைப்பின்றி ஓதிவந்தாள் மோகனா. அதைக் கேட்டு கவலைகள் ஒழித்தாள் அந்த அன்னை. வளர்மதி போல் மோகனாவின் உள்ளமும் உடலும் வளர்ந்து 'இந்தக் கண்ணன் யார்?' என்ற கேள்வி



அவள் உள்ளத்தின் அடித்தளத்திலே எழுந்து ஒருநாள் தன் அன்னையிடம் இதனைக் கேட்டாள். குழந்தைகளின் சிறு உள்ளங்களில் எழும் எண்ணிலா ஐயங்களைப் போக்குவது தாய்மாரின் கடமையன்றோ! ஒவ்வொரு மாலையும் கண்ணனின் உன்னத குணங்களையும அவன் வாழ்க்கை யோடு பின்னப்பட்ட அரிய இனிய கதைகளையும் தாயானவள் கூறக்கேட்டு பரவசம் அடைந்தாள் அச்சிறுமி. "அம்மா! அவன் பெயரை மறவாது பாடுவோர்க்கு கேட்டதெல்லாம் கொடுப்பான் கண்ணன் என்று கூறினாய். அப்படியானால் என்னிடமும் வருவான்தானே?" என்று மிக ஆவலோடு கேட்ட குழந்தையின் வருடிய வண்ணம், "ஆமாம் கண்ணே! கண்ணன் உன்னை மறவான்," என அன்பொழுகக் கூறினாள் அன்னை.

மங்கைப் பருவம் மோகனாவை வந்தடைந்தது. மனம் என்றும் மாதவனையே தியானித்தது. அன்றொருநாள் அன்னை சொன்ன மொழி- 'கண்ணன் உன்னை மறவான், -என்னும் வாசகம் அவள் காதில் என்றும் ஒலித்துக்கொண்டேயிருந்தது என்னை மறவாத கண்ணனை நான் மறக்க முடியுமா?' என்ற உணர்ச்சி உள்ளத்தெழுந்தது. மேகவர்ணனின் சிலை முன்நின்று இன்னிசை பாடுவதில் இன்பம் கண்டாள். வண்ணமலர் பறித்து மாலையாக்கி ஆவனுக்கிட்டு அழகு பார்ப்பதில் அகமகிழ்ந்தாள். பகலெல்லாம் கதவண்டை கேட்கும் காலடிச் சத்தமெல்லாம் கண்ணனை நினைவூட்டின. இரவெல்லாம் கண்ணன் கைப்பற்றியழைக்க கனாக்கண்டாள்.

அன்று பௌர்ணமி நாள்; அழகிய வெண்மதி தன் பொற்கரங்களால் புவனத்தை அணைத்து நின்ற வேளை; எங்கும் நிசப்தம் நிலவும் நடுநிசி. கண்ணனை நினைத்த வண்ண்ம் கட்டிலில் புரண்டு கொண்டிருந்தாள் மோகனா. கதவருகே காலடிச் சத்தம் கேட்டு துள்ளி எழுந்தாள். கையில் தூண்டா விளக்கேற்றிச் சென்று, சந்தடி எதுவுமின்றி கதவைத் திறந்தாள். பட்டப் பகலென இருந்த நிலவொளியில் அவ்வுருவம் நன்றாய்த் தெரிந்தது. ஆச்சரியத்தால் குரலெழும்ப மறுத்தது "ஆ! தாடித் தாத்தா!" என்று அவள் உதடுகள் முணு முணுத்தன.

"குழந்தாய்! நேரம் ஆகி விட்டது; உடனே புறப்படு; கண்

ணன் உன்னை அழைத்துவரச் சொல்லி என்னை அனுப்பினான்." இவ்வினிய சொற்களைச் செவிமடுத்த மோகனாவின் கைகள் குவிந்தன; கண்கள் ஆனந்த நீர் பெருக்கின; உதடுகள் "கண்ணா! கண்ணா!" என்று உச்சரித்தன. அன்னையையும் அத்தனையும் மறந்தாள். அந்தத் தாத்தாவின் பாதச் சுவடுகளைப் பின் பற்றி பலகாத தூரம் சென்று விட்டாள். மங்கையர் நடுநிசியில் தனிவழி போவது அழகல்ல எனினும் ஆசாரத்தைக் கூட மறந்தாள்.

அவள் இல்லத்திலிருந்து சிறிது தூரத்தில் இருந்த கண்ணன் கோவிலுக்குள் நுழைந்தார் தாத்தா. மங்கையும் தொடர்ந்தாள். "தாத்தா! என் கண்ணன் இந்நேரத்தில் விழித்திருப்பானா?" என அன்புடன் கேட்ட மோகனாவுக்கு தாத்தாவிடம் இருந்து விடைவரவில்லை. சுற்றும் முற்றும் பார்த்தாள்; அவர் உருவைக் காணவில்லை. மூலஸ்தானத்தில் எரிந்து கொண்டிருந்த விளக்கின் மங்கிய ஒளியன்றி வேறோர் ஒளியுமில்லை எனவே தன்னந்தனியே அவ்விடத்தில் நின்ற அம்மங்கையின் மனம் சஞ்சலம் அடைந்தது. சஞ்சலத்தைக் கெடுத்துச் சாந்தத்தைக் கொடுக்கும் நாமம்-அந்தக் கண்ணன் நாமம்-அவள் நாவில் எழுந்தது. தன்னை மறந்து 'கண்ணா! கண்ணா!' என்று என்று கண்ணீர் விட்டுக் கதறினாள். இருள் குடிகொண்டிருந்த சூழ்நிலை ஒளிபெறுவது போன்ற உணர்ச்சி! கண்களைத் திறந்தாள். அவளது ஆருயிர்க் கண்ணன் பண்ணிசைத்து நின்றான். 'கண்ணா!' என்றலறியவண்ணம் அவன் பாதகமலங்களில் அடியற்ற மரம் போல் வீழ்ந்தாள். விழிகள் பெருக்கிய நீராய் பாதபூஜை செய்தாள். "கண்ணா! உன்னைக் காணவரும் ஆவலில், கையில் ஏதும் கொண்டுவர மறந்தே போய்விட்டேன்." "மோகனா! நீ அன்புப்பழம் கொணர்ந்தாய்; அதுவே போதும். நின் அன்புப் பழத்திற்கு யான் கைமாறு ஏதும் தந்தேயாக வேண்டும்; என்ன வேண்டும் கூறு!" என்று அன்பு மொழி பகர்ந்து தன் அடியினை பணிந்துநின்ற மோகனாவின் அருட்தாகம் தீர்த்தான். "அண்ணலே! நின் அருள் என்றும் வாழி! கண்ணில் ஒளி போலே என் உயிர் நின் இன்னுயிரோடு இரண்டறக் கலத்தல் வேண்டும். இப் பேரின்பத்தை எனக்கின்றே அருள்வாய் கண்ணா!" என்று ஆவேசத்துடன் கூறினாள் மோகனா. 'நின் அன்பே அன்பு! வாழ்க! நின் அருட் காதல்' என்று



கூறியவண்ணம் தன் அருட்கையை அவன் சென்னியில் வைத்து ஆசீர்வதித்தான், அன்பர்க்கின்பம் அருளும் தெய்வக் கண்ணன்.

பொழுது விடிந்தது; பொற்கோழி கூவிற்று. அருணன் வரவுகண்டு அனைவரும் மகிழும் வேளை, வீட்டின் மூலை முடுக்குகளில் மோகனாவைத் தேடிக் காணாத தாய் பதற்றமடைந்தாள் அவள் அழுகுரல் கேட்டு அயலவர் கூடினர். எங்கும் தேடினர் 'கண்ணன் பித்து அவளைக் காணாமற் செய்துவிட்டது" என்று பேசிக்கொண்டனர் சிலர்; 'என்ன இருந்தாலும் பெண்ணாகப் பிறந்தவர்களுக்கு அடக்கம் வேண்டாமா? பக்தியாம் பக்தி! என்று காரமாய் ஒலித்தது பாட்டிமாரின் குரல்.

"அம்மா! பசிக்குது; அன்னம் இருந்தால் தயவு கூர்ந்து கொடுங்கள்' என்ற குரல்கேட்டு மோகனாவின் தாய் திடுக்கிட்டாள். மோகனாவுக்கு கண்ணன் நாமம் சொல்லிக்கொடுத்த தாத்தா அவர்தான் என அவள் நன்கு அறிந்திருந்தாள். அவர் அருகே சென்று ஆற்றொழுக்குப் போல விழிநீர் பெருக்கி "என் கண்மணியை எங்காவது கண்டீர்களா?" என்று ஆர்வமுடன் கேட்டாள். தாத்தா புன்னகை பூத்து, பின் பெருமூச்செறிந்து விட்டு, கண்களை மூடியவண்ணம் இனிமையாகப் பாடினார்:-

"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை
தன்னை மறந்தாள்; தன் நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே"

ஆங்கு இப்பாடலைக் கேட்டுக்கொண்டிருந்தோர் அனைவரும் வாயடைத்துப் போய்நின்று கண்ணீர் பெருக்கினர்.

### பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின்

## பல்லாண்டு வாழ்த்து.

வண்ணைக் கவிபொன் னம்பல பிள்ளை
வளங்கொ ளிலக்கிய மாதோடும்
வாய்த்திடு கலவியில் தோற்றிய மடமகள்
வளமார் கவிநய மாஞ்செல்வி
தன்னைத் தமர்கயி லாயதர் மோதயர்
தாம்நனி வேண்டிடத் தாவில்சீர்
சால்பொருள் யாப்பணி யாதிய சீதனந்
தந்து குருத்துவ மும்பேணுஞ்
சுன்னைக் குமரசு வாமிப் புலவர்
துலங்கிடு சந்நிதி கைப்பற்றிச்
சுந்தர வாழ்வினி லங்கவ ளுக்கொரு
தோற்றமு மேற்றமு மீந்தனையால்
பண்ணைப் பொழியிசை பண்டித மணியே
பார்மிசை வாழிய பல்லாண்டே!
பார்புக ழீழத் தோர்கவி மணியே
பார்மிசை வாழிய பல்லாண்டே!!

நாவலர் நடைநெறி காவல! பண்டித!
நற்றமிழ் மரபின் பொற்கோயில்!
நவபா ரதமுதல் நலமா ருரைதரு
நாகமா சுவைநிறை கருவூலம்!
கீரவலர் போற்றிய கம்பர் கவிக்கடல்
கண்டு முகந்து படர்ந்தேறிக்
கற்பனை தழுவக் கவிரச மொழுகக்
கவினு ருரைபொழி கலைமேகம்!
தேவலர் கந்த புராண வியன்சுவை
சிந்தையி லூறி மிதந்தேறித்
தினகர னிகழினுங் கமழ்தர எழுதிய
செவ்வியல் நன்னடை கைவந்தோய்!
பாவலர்க் கணியே! பண்டித மணியே!
பார்மிசை வாழிய பல்லாண்டே!
பல்லாண் டினும்பல பல்லாண் டினும்பல
பல்லாண் டினும்பல பல்லாண்டே!!!

## ஞானவிருந்து.

சுவாமி சிவானந்த சரசுவதி அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பெற்ற நூலை சுவாமி இராமானந்தா அவர்கள் தமிழாக்கம் செய்துள்ளார்கள். சுவாமிகளின் 73 ஆவது பிறந்த தின வெளியீடாக கொழும்பு இந்து சமய ஆலோசனைச் சபையின் பண உதவியுடன் திரு. க. பொன்னம்பலம் (மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பளை சிலோன்) அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். இந்நூல் உண்மையில் தெய்விகப் பண்பாடுடையது, வரிகள் தோறும் உள்ள சொற்கள் வாசிப்போரைத் தெய்விக உலகிற்கு இட்டுச் செல்வன. ஆத்மீகப் பாதையில் அடியெடுத்து வைக்கும் அனைவருக்கும் இது ஓர் கலங்கரை விளக்காக வழிகாட்டுகின்றது. எழுநூற்று ஐம்பத்து மூன்று ஞான உபதேசங்கள் அடங்கி உள்ளன.

## தோரோ-டால்ஸ்டாய்-காந்தி.

எழுதியவர்: **பியாரிலால்.**

வெளியிடுவோர்: **சர்வோதயப்பிரசுராலயம், தஞ்சாவூர், S. I.**

விலை: 25 நயாபைசா.

அஹிம்சை வழிகாட்டிய ஆன்றோர் மூவர். மேலே கூறப்பட்ட மூவரும் செய்த ஆராய்ச்சிகளின் விளைவுதான் இந்திய விடுதலைக்கு அடிகோலிய அஹிம்சா ஆயுதம். சட்ட மறுப்புக் கொள்கையை முதலில் பிரகடனம் செய்தவர் அமெரிக்க வேதாந்தி தோரோ. காந்திஜியின் சாத்விக எதிர்ப்புக்கு ஆதரவு கொடுத்தவர் ருஷ்ய முனிவர் டால்ஸ்டாய். காந்திஜியின் சத்தியாக்கிரகத்தை உருவாக்குவதில் இருவரும் பேருதவி புரிந்தனர். அஹிம்சா ஆயுதம் என்னும் ஆன்மிகசக்தி இந்தியருக்குமட்டுமல்ல, அமெரிக்கருக்கோ, அல்லது ருஷிய மக்களுக்கோ மட்டுமல்ல, எல்லாருக்கும் சொந்தமானதே என்பதை மூவரும் விளக்குகின்றனர். அஹிம்சை வழிவாழ வழிகாட்டுகிறது இந்நூல்.

Registered at the G. P. O. as a News Paper M, L. 59-300

# சந்தா நேயர்களுக்கு!

அன்புடையீர்!

இதோ உங்கள் ஜோதிக் குழந்தைக்கு பன்னிரண்டாவது வயது ஆரம்பித்துவிட்டது. நீங்கள் சோதியை நினையாவிட்டாலும் சோதி உங்களைத் தேடி உங்கள் வீட்டிற்கு வந்துவிட்டது. வீடுதேடி வந்தவரை வெறுங் கையுடன் அனுப்பிவைத்தல் அழகல்லவே. உடனே உங்கள் சந்தாவை அனுப்பிவைப்பீர்களாக.

இந்தியாவிலுள்ள அன்பர்கள் வழக்கம்போல R. வீரசர்பு, சர்பு இண்டஸ்ரீஸ், சேலம்-2 என்ற விலாசத்திற்கு அனுப்பிவைப்பதோடு இவ்விடமும் அறியத்தர வேண்டுகின்றோம்.

ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி. (சிலோன்)

## விளம்பரம்.

தென்மராட்சி, கச்சாய்க் கோயிற்பற்றைச் சேர்ந்த உசன் சமாதி மடம் சடைவரதர் முனிவர் ஆச்சிரமம், இதுகாறும் நடராசா மங்கையர்க்கரசியாகிய எனது ஆதிக்கத்தில் இருந்துவந்தது. இவ் ஆச்சிரமத்தையும் அதற்குரிய சொத்துக்களையும் என்பேரிலிருந்த ஆதனங்களையும் ஆச்சிரமத்துக்கே தருமஞ் செய்து, பின்வரும் பஞ்சாயத்தாரிடம் 3-8-58ல் ஒப்படைத்து விட்டேன்.

1. வே. அம்பலவாணர், மிருசுவில்
2. ஐ. பேரம்பலர், ஏழாலை
3. த. சபாபதி, யாழ்ப்பாணம்
4. ஆ. வயிரமுத்துச்சாமி, செல்லச்சந்நிதி
5. கா. நவரத்தினர், நல்லூர்

இங்ஙனம்,

ந. மங்கையர்க்கரசி.

Printed & Published by Mr. N. Muthiah,
"Athmajothi" Nilayam, Nawalapitiya.
at RAJAH PRESS, Theatre Road, Nawalapitiya, (Ceylon.) 16-11-59.